
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1183

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

54

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!



ஓவியம் : ரவி பேலட்

# கழக அரசும், அன்பால் சாதித்த கல்லூரி மாணவிகளும்!

2003-இல் இராணி மேரி கல்லூரியை இடிக்கும் சூழ்நிலை உருவானதும், அதைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கையாக, ஒன்றியச் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அறிவிக்கை ஆதரவாக இருந்தது. துறை அமைச்சராக இருந்த கழகத்தின் பொருளாளர் டி.ஆர்.பாலு பிறப்பித்த உத்தரவுக்கு, அரசியல் சாயம் உள்ளதாக, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்குத் தொடர்ந்தது. அந்த வழக்கில், இடை மனுதாரராகக் கழகம் இணைந்துகொண்டது. குறிப்பாக, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் கழக விதிகளின்படி, பெருநகர எல்லைக்குள் இருக்கும் புராதன கட்டடங்கள், தொல் அடையாளங்களை அழிக்கக்கூடாது என, இடை மனுதாரராகக் கழகம் சேர்ந்துகொண்டது.

கல்லூரியின் முன்னாள் மாணவிகள், பேராசிரியர்கள் சார்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தவிர, இந்திய மாணவர் சங்கத்தின் சார்பில், மாணவிகள் தரப்பிலிருந்தும் மற்றொரு வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு வந்த நிலையில், வழக்கின் முக்கியத் திருப்பமாக, இராணி மேரி கல்லூரி கட்டுவதற்காக இடத்தை வழங்கியவரின் கொள்ளுப்பெயர்த்தி மகாலட்சுமி என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்குத் தொடர்ந்தார்.

இவையெல்லாம் பத்திரத்திலேயே தெளிவாக உள்ளது. எனவே, இராணி மேரி கல்லூரியை இடிக்கக் கூடாது. மீறி இடித்தால், அந்த இடத்தின் பூர்வ உரிமையாளர் என்ற வகையில், என்னிடம்தான் கொடுக்க வேண்டும். இதற்கு சட்டபூர்வ உரிமையும் எனக்கு உள்ளது என, தனி வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்குகளில், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில், நீதிபதி சதாசிவம் அமர்வு ‘இராணி மேரி கல்லூரிக் கட்டடத்தை இடிக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சிக்கு, ஆதரவான தீர்ப்பினை அளித்தது. குறிப்பாக, ஒன்றியச் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கடலோரப் பாதுகாப்பு ஒழுங்குமுறை விதிகள் இந்த வழக்கிற்குப் பொருந்தாது என்றது அவரது தீர்ப்பு. இதை அடுத்து, அந்தத் தீர்ப்புக்குத் தடை விதிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் சென்றது கழகம்.

1915-ஆம் ஆண்டு ஆங்கிலேயே அரசு, மெரினா கடற்கரையில், ரத்தின சபாபதி முதலியார் என்பவரிடம் நிலத்தை வாங்கிய இடத்தில்தான் இராணி மேரி கல்லூரியைக் கட்டியது.

அவரது கொள்ளுப்பெயர்த்தி மகாலட்சுமி தொடர்ந்த வழக்கில், “இராணி மேரி கல்லூரியை இடிப்பதாக இருந்தால், அந்த இடத்தை தன்னிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என நீதிமன்றத்தில் முறையிட்டார். கல்லூரி கட்டத்தான் அந்த இடத்தை என் கொள்ளுத் தாத்தா வழங்கினார். இதனால், அங்கு கல்லூரி மட்டுமே இயங்க வேண்டும். அந்த இடத்தை வேறு பணிகளுக்குப் பயன்படுத்தக் கூடாது, மீறி இடித்தால் இடத்தை உரிமை யாளரிடமே ஒப்படைக்க வேண்டும் என்று நிலம் ஆர்ஜிதம் செய்தபோதே என் தாத்தா நிபந்தனை விதித்துள்ளார்.

அந்த நிபந்தனைகளை, ஆங்கிலேய அரசு ஏற்றுக்கொண்டதால்தான் நிலம் தரப்பட்டது.

### கல்வி வளர்ச்சியில் அக்கறை

தி.மு.கழகத்தைப் பொறுத்தவரை, கல்வி வளர்ச்சியில் காட்டும் அக்கறை போலவே, கல்லூரி வளாகத்தைக் காக்கும் போராட்டமும் உறுதியானது. சென்னை, இராணி மேரி கல்லூரியைக் காப்பாற்றும் விஷயத்தில் மட்டுமல்ல, அந்தக் கல்வி நிலையக் கட்டமைப்பை மாற்றும் விஷயத்திலும் கலைஞர் உறுதியுடன் நின்றார். அவருக்குப் பின் அதே உறுதியோடு நிற்கிறார் நம் முதலமைச்சர்.

2022-ஆம் ஆண்டு நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், முதலமைச்சர் அவர்களிடம் இராணி மேரி கல்லூரி வளாகத்திலேயே மாணவியர் தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக விடுதி ஒன்றைக் கட்டித்தர வேண்டும் என மாணவியர் கோரிக்கை வைத்தனர்.

அந்தக் கோரிக்கையினை உடனே ஏற்றுக்கொண்டு, விழா மேடையிலேயே விடுதி கட்டித் தரப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அந்த அறிவிப்பின்படி, சென்னை இராணி மேரி கல்லூரியில் 42 கோடி ரூபாய் செலவில், நவீன வசதிகளுடன் 455 மாணவியர் தங்கிப் படிக்கும் வகையில், கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் 2025-ஆம் ஆண்டில் திறந்து வைத்தார். தவிர, நாடாளு மன்ற உறுப்பினர் பி.வில்சன் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில், கல்லூரி வளாகத்தில் கலையரங்கம் கட்டவும் அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சரான பின்பு மட்டுமல்ல, 2010-ஆம் ஆண்டிலேயே முதலமைச்சர் கலைஞரிடம் கோரிக்கை வைத்து, கல்லூரிக்குப் பல திட்டங்களைக் கொண்டு வந்தார் அன்றைய துணை முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். அப்போது கட்டப்பட்டிருந்த கலைஞர் மாளிகையைத் திறந்து வைக்க வருகைதந்த முதலமைச்சர் கலைஞரிடம் கோரிக்கை வைத்தார், அன்றைய உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி.

இந்தக் கல்லூரி வளாகத்தில் சேதம் அடைந்துள்ள, பழுதான பழைய கட்டடங்கள் இருப்பதைக் குறிப்பிட்டு, புதிய கட்டடங்கள் கட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் அமைச்சர் பொன்முடி. அவர் முன்மொழிந்த கோரிக்கையை, துணை முதல்வர் என்ற முறையில், ‘நான் வழிமொழிகிறேன்’ என்றார், அப்போது பேசிய துணை முதலமைச்சராக இருந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். ‘முதல்வர் நிச்சயம் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவார் என்ற நம்பிக்கை உள்ளது’ என்றார். இப்படி இக்கல்லூரியில் உள்ள வசதிகள் போதாது என்று வலியுறுத்தி, அவர் துணை முதல்வராக இருந்தபோதே நிறைவேற்றிக் கொடுத்தவர்.

எதையும் அடக்குமுறையால் சாதித்து விடலாம் என நினைப்பது ஒரு ஆட்சிக்கு அழகாகாது. கழக அரசு, கலைஞர் காலத்திலும் சரி, திராவிட மாடல் அரசு காலத்திலும் சரி, பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையிலேயே நடந்துகொள்கிறது. இராணி மேரி கல்லூரி விழாவில் பேசும்போது, “என்னென்ன தேவைகள் என்பதைப் பட்டியலிட்டால், கல்விக்குச் செலவிட இந்த அரசு ஒருபோதும் தயங்காது என்பதை உறுதியுடன் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்” என்றார் கலைஞர். அதையே தடம் மாறாமல் கடைப்பிடித்து வருகிறார், இன்றைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். கல்லூரி வழக்கிலும் அந்த உறுதியைப் பார்க்கலாம்.

> **“என்னென்ன தேவைகள் என்பதைப் பட்டியலிட்டால், கல்விக்குச் செலவிட இந்த அரசு ஒருபோதும் தயங்காது என்பதை உறுதியுடன் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.”**

...தொடரும்

## பா.ஜ.க.வின் நாடகம் முடிந்து, முகமூடி கழன்றது!

சட்டமன்றத் தேர்தல் முடிந்து, இன்னும் முடிவுகள்கூட வெளியாகவில்லை. ஆனால், அதற்குள் பா.ஜ.க. தனது இயல்பு நிலைக்குத் திரும்பி, மக்கள் விரோத கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான செயல்பாடுகளை மேற்கொண்டிருக்கிறது எனப் பதிவிட்டுள்ளார், திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன்.

அவரது பதிவில் இருந்து,

“தேர்தல் முடிந்தவுடன், பா.ஜ.க. தனது உண்மையான முகத்தைக் காட்டத் துவங்கி இருக்கிறது. புதுச்சேரியில், சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் ஏற்கெனவே மும்மொழிக் கொள்கையை ரங்கசாமி அனுமதித்துவிட்டார். மூன்றாவது மொழியாக இந்தியும் படிக்கலாம், பிரெஞ்சும் படிக்கலாம் என்ற நிலை இருந்தது. இப்போது, ஆறாம் வகுப்பில் இருந்து இந்தி கட்டாயம் என்றும், ஒரு வாரத்திற்குள் இதை அமல்படுத்த வேண்டும் என்றும், ஒன்றிய அரசு உத்தரவிட்டதுடன், பிரெஞ்சு மொழியும் படிக்கலாம் என்ற வாய்ப்பைப் பறித்துவிட்டது.

அதேபோல, இந்திய ரயில்வேயில் 29 ஆயிரத்து 608 வேலை வாய்ப்புகளைக் குறைப்பதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இதனால், தெற்கு ரயில்வேயில் 2,000 பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட இருக்கிறார்கள். மற்றொரு மாநில உரிமைப் பறிப்பு அறிவிப்பும் வந்திருக்கிறது. இந்தியாவில் உள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான அனல் மற்றும் அணுமின் நிலையங்களில், உற்பத்தியாகும் மின்சாரத்தின் பெரும் பகுதியை அந்த மின் நிலையங்கள் அமைந்துள்ள மாநில அரசுகளுக்கே குறைந்த விலையில் வழங்கப்பட்டு வந்த நிலையைத் திடீரென்று ஒன்றிய அரசு மாற்றியுள்ளது. உற்பத்தி செய்யப்படும் ஒட்டுமொத்த மின்சாரத்தையும் போட்டி ஏல முறையில் விலை நிர்ணயம் செய்து, விற்பனை செய்ய முடிவெடுத்துள்ளார்கள். இந்தப் போட்டி ஏலமுறையால், பல மடங்கு கூடுதல் விலை கொடுத்து, தமிழ்நாடு அரசு மின்சாரத்தை வாங்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

நேற்று வரை, மோடிக்குப் பல்லக்குத் தூக்கிய அன்புமணியே இன்று இதற்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்நாட்டின் நலன்களை மோடி பார்த்துக்கொள்வார் என்று பேசி வந்த சரணாகதி எடப்பாடி, இப்போதும் இந்த முக்கியப் பிரச்சினையில் முதலாளியிடம் கைகட்டி வாய் பொத்தி நிற்கிறார்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



எம்.தேவநிதி



### திருமண நாளன்று தலைவருடன்...

2013-ஆம் ஆண்டு, எனது திருமண நாள் அன்று முத்தமிழறிஞர் கலைஞரைச் சந்தித்து வாழ்த்துப் பெற கோபாலபுரத்துக்குக் குடும்பத்துடன் சென்றிருந்தேன். என் துணைவியார் சந்தானலட்சுமி, மகன் கருணாநிதி, மகள் ரசிகா மற்றும் கழகத் தோழர் நாகராஜ், புகைப்படக் கலைஞர் ரகு ஆகியோரும் தலைவருடன் மகிழ்ச்சியாக எடுத்துக்கொண்ட புகைப்படம்.

**– எம்.தேவநிதி,**
**தலைமைக் கழகப் பேச்சாளர்,**
**எழும்பூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நறுக்கு

### கர்நாடகாவில் கழக வளர்ச்சி!

1958-இல் பெங்களூருவில் உள்ள சுபாஷ் நகரில், தி.மு.க. சார்பில் மாநாடு ஒன்று நடைபெற்றது. கன்னட இலக்கியவாதியான டி.பி.கைலாசத்தின் பெயர் மாநாட்டுப் பந்தலுக்குச் சூட்டப்பட்டது. அன்றைக்கு மைசூரு மாநிலமாக இருந்த இதன் பெயரை, ‘கர்நாடகம்’ என மாற்றக்கோரி அந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. ‘தமிழகத்தில் மட்டுமன்றி, மைசூரு மாநிலத்திலும் தி.மு.க. வேகமாக வளர்ந்துவருகிறது. வட இந்தியர்கள், இந்த வளர்ச்சியைக் கண்மூடி கவனிக்காமல் இருந்துவிடக் கூடாது’ என மும்பையில் இருந்து வெளிவந்த ‘கரன்ட்’ ஏடு செய்தி வெளியிட்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900